5 மார்ச் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு(உள்ளடக்கியது) பங்கெடுப்பு,(படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்: குடும்பமும் இறைவேண்டலும்

நிகழ்வின் நோக்கம்: உலக இறைவேண்டல் நாள் - தவக்காலம்

## இவருக்குச் செவிசாயுங்கள்

நம்மைச் சுற்றி நடக்கும் மாற்றங்களுக்கு மத்தியில், வெளியிலிருந்தும் நமக்குள்ளும் பல குரல்கள் ஒலிப்பதை நாம் உணர்கிறோம். வர்ணனையாளர்கள், என்ன நடக்கின்றன, என்ன செய்யவேண்டும்? என்று ஒரு யூகத்தையும் தீர்ப்பையும் பற்றிப் பேசுகிறார்கள். மேலும், ‘இப்படி இருந்திருக்க வேண்டும்’ ‘இப்படித்தான்’ ‘என்ன செய்ய முடியும்’ என்று நம்முள் ஐயத்தையும் விமர்சனங்களையும் உருவாக்குகின்றனர்.




ஒரு சிலர், ஓடி ஒளிந்துகொள்ள சொல்கின்றனர். ஒரு சிலர் எதிர்த்து சண்டையிடச் சொல்கின்றனர். சிலர் கேள்விகள், விளக்கங்களைக் கேட்கின்றார்கள். இன்னும் சிலர், குற்றம் சாட்டுகிறார்கள், மறுக்கிறார்கள் அல்லது சாக்குப் போக்கு சொல்கின்றனர்.

பல குரல்கள் நம்முடைய கவனத்தை ஈர்க்கின்றன. அனைத்தும் நமக்கு பயனுள்ளதாகவோ, செவிகொடுத்துக் கேட்கும் தகுதியுடையதாகவோ இல்லை. சில இனிமையானவை; உண்மையில் வேறுபட்டு இருக்கும். நற்செய்தியில் நாம் பார்க்கும் இயேசுவின் தோற்றமாற்றம் இதை நமக்கு நினைவூட்டுகின்றன. ஒரே குரலுக்குச் செவிசாய்ப்பது, கடவுளின் அந்த குரலும் சொல்வது “என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர்பொருட்டு நான் பூரிப்படைகிறேன், இவருக்குச் செவிசாயுங்கள்”

கிறிஸ்துவின் அந்த ஒரே குரலை நாம் கேட்கவும், செவிசாய்க்கவும் முயற்சி செய்தால் என்ன? இன்றைக்கு நம் வாழ்விலும், உலகிலும் அவர் சொல்வதைக் காதுகொடுத்து செவிமடுத்தால் என்ன? அவர் என்ன சொல்கிறார், என்ன செய்கிறார் என்பதைப் பற்றி விழிப்போடும் கவனத்துடனும் இருப்போம். அவர் இந்த உலகும் வாழ்வும் அவரின் வழியில் செல்ல, அவருடைய கவலைகள், அவருடைய ஆசைகள் நம்முடையவனாக மாறட்டும்.

நம்முடைய மனசாட்சிக்கு செவிசாய்க்கும்போது, விவேகமுள்ள மனிதன் கடவுள் பேசுவதைக் கேட்க முடியும் ( கத்தோலிக்க மறைபோதகம் என்: 1777)

இத்தவக்காலத்தில் அவருக்குச் செவிசாய்க்குமாறு அழைக்கிறார். நம் குடும்பங்களில் நம்மோடு பேசுகிறார். **குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும், ஒருவருக்கொருவர் ஆதரவு தருவோம். இயேசுவுக்கு செவிசாய்ப்போம்.** அன்றாட இறைவார்த்தையை வாசித்து, உங்களை ஈர்த்த வார்த்தையை குடும்பத்தில் உள்ள மற்றவரோடுப் பகிர்ந்துகொள்ளுங்கள். இவ்வாறு பகிர்ந்து, செவிசாய்த்து குடும்பமாக இணைந்து நேரம் ஒதுக்கி இறைவேண்டல் செய்யுங்கள்

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும், ஒருவருக்கொருவர் ஆதரவு தருவோம். இயேசுவுக்கு செவிசாய்ப்போம்.

### இன்றைய வாசகங்கள்:

முதல் வாசகம்: தொடக்கநூல்: 12: 1-4 “கடவுள் ஆபிரகாமை அழைத்தார்”

திருப்பாடல்: 33: 4-5, 18-20,22 “நம்பிக்கைத் தரும் திருப்பாடல்”

இரண்டாம் வாசகம்: 2 தீமோத்தேயு “கடவுள் நம்மை அழைக்கிறார்”

நற்செய்தி: மத்தேயு 17: 1-9 “இவருக்குச் செவிசாயுங்கள்”



*Published by:*
Peninsular Malaysia Pastoral Team

*Email:* api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

BUL 10/2023